**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

## STC.NO. 19/2021 DW-2

| | |
|---|---|
| Name | அப்துல் வவாப் |
| Husband/Father Name | நூருல்லா |
| Village /Area | மேல் விசாரம் |
| Taluk | |
| Occupation | தோல் வியாபாரம் |
| Age | 46 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 05.03.2026 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

### முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தோல் வியாபாரம் செய்து வருகிறேன். நான் இவ்வழக்கின் 6ம் எதிரி ஆவேன். புகார்தாரர் நிறுவனம் வாசுவி எண்டர்பிரைசர்ஸ் எனக்கு தெரியாது. அந்த நிறுவனத்துடன் எனக்கு எந்த கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை. நான் அந்த நிறுவனத்திற்கு காசோலை கொடுக்கவில்லை. எனது நிறுவனம் குளோபல் எண்டர்பிரைசர்ஸ் சாலீம் shoes நிறுவனத்தின் சிஸ்டர் கன்சன் இல்லை. சாலீம் shoes நிறுவனத்துடன் எங்களுக்கு வியாபார தொடர்பு மட்டுமே அங்கு எங்களுக்கு உறவினர்கள் யாரும் இல்லை.

சாலீம் shoes நிறுவனத்தின் கடனுக்காக நான் என் நிறுவனத்தின் காசோலை எதுவும் கொடுக்கவில்லை. எனது காசோலை மிஸ்யூஸ் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கோரப்பட்டுள்ள கடனுக்காக எந்த காசோலையும் நான் அளிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

குளோபல் எண்டர்பிரைசர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் நான்தான் என்றால் சரிதான். அது ஒரு புரோபரைட்டர் நிறுவனம் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் நான் என்ன வியாபாரம் செய்கிறேன் என்றால் பச்சை தோல் மற்றும் Wet blue தோல் வியாபாரம் செய்கிறேன்.இவ்வழக்கின் ஒன்றாம் எதிரி சாலீம் shoes க்கும் எனக்கும் நிறைய வியாபாரம் பரிவர்த்தனைகள் நடந்துள்ளது என்றால் சரிதான். சுமார் எத்தனை ஆண்டுகள் வியாபாரம் தொடர்பு இருந்தோம் என்றால் 6-8 வருடங்கள் வரை. அந்த நிறுவனத்தின் உரிமையாளர்களான இரண்டு முதல் ஐந்து எதிரிகள் எனக்கு நன்கு பரிச்சையமான நபர்கள் என்றால் ஓரளவுக்கு தெரியும்.

எங்கள் நிறுவனத்திலிருந்து பச்சை தோல் மற்றும் Wet blue தோலை ரொக்கத்திற்கு மட்டும் விற்பனை செய்வோமா அல்லது கடனுக்காக விற்பனை செய்வோமா என்றால் இரண்டு வகையிலும் விற்பனை செய்வோம். இரண்டு நிறுவனத்திற்கும் நடந்த பரிவர்த்தனை எல்லாமே GST பரிவர்த்தனைகள் என்றால் சரிதான். 8 ஆண்டுகள் பழக்கத்தில் எவ்வளவு ரூபாய்க்கு எங்களிடையே வியாபாரம் பரிவர்த்தனைகள் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. எனது குளோபல் நிறுவனம் No.399 சுண்ணாம்பட்டி தெரு, தென் நந்தியாளம், மேல் விஷாரத்தில் உள்ளது என்றால் சரிதான். ராணிப்பேட்டையில் உள்ள HDFC வங்கியின் எனது வங்கி கணக்கு எண் என்னவென்றால் கடைசி நான்கு எண்கள் 5390 ஆகும். எனது நிறுவனத்தின் ஆண்டு Turn over என்னவென்றால் Auditer ஐ கேட்டு சொல்ல முடியும். சாலீம் shoes நிறுவனத்திலிருந்து எனது நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு 09.09.2015-ல் ரூ.4,50,000/- பணம் வந்துள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதேபோல் பல்வேறு தேதிகளில் எனது

நிறுவனத்திற்கும், சாலீம் நிறுவனத்திற்கும் பல கோடி பரிவர்த்தனைகள் நடந்துள்ளது என்றால் அனைத்தும் வியாபாரம் சார்ந்த பரிவர்த்தனைகள் ஆகும்.

இந்த பரிவர்த்தனைகள் அனைத்திற்கும் என்னிடம் ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆமாம். அவை அனைத்தையும் நீதிமன்றம் கேட்கும்பட்சத்தில் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது ஆடிட்டரை கேக்க வேண்டும். என்னிடம் காட்டப்படும் **ம.சா.ஆ.5** காசோலை என்னுடையது தான் என்றாலும், அதில் உள்ள கையொப்பமும் என்னுடையது தான் என்றாலும் சரிதான். எனது வங்கி காசோலை போதுமான பணம் இல்லை என்பதற்காக திருப்பப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு அளிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இந்த காசோலைக்காக தான் இந்த வழக்கு நடக்கிறது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கிற்காக ஆஜராகும் போது எனக்கு தெரியவந்தது.

நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் இந்த வழக்கு வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு 15.10.2020-ம் தேதி அன்று வழக்கறிஞர் U.முகமது இம்ரான் பைஸ் மூலம் அனுப்பினேன் என்றால் அந்த வழக்கறிஞரை எனக்கு யாருனே தெரியாது. இந்த வழக்கின் காசோலை எண்.000481, 30.09.2020 தேதியிட்ட காசோலை போதிய பணம் இல்லாமல் திருப்பியதற்கு புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு எனது வழக்கறிஞர் K.சுஜாதா அவர்களின் மூலமாக 24.11.2020 ம் தேதியன்று ஒரு பதில் அளிப்பு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எனக்கு தெரியாமல் இந்த வழக்கறிஞர் அறிவிப்பு அளிக்கப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் நீதிமன்ற அழைப்பாணை பெற்றவுடன் நான் சென்னை

உயர்நீதிமன்றத்தை அணுகி இந்த வழக்கினை ரத்து செய்ய வழக்கறிஞர் பிரபாகர் என்பவர் மூலம் மனு தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. அந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது என்றால் தெரியாது. நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய எந்த வக்காலத்திலும், மனுவிலும் கையொப்பம் செய்யவில்லையா என்றால் ஆமாம்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்யவில்லை எனும் போது யார் என் பெயரில் மனுதாக்கல் செய்திருப்பார்கள் என்று சந்தேகம் உள்ளது என்றால் அதுபோல் எந்த சந்தேகமும் இல்லை. இந்த வழக்கின் இரண்டு முதல் ஐந்தாம் எதரிகள் மற்றும் நானும் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரே வழக்கறிஞர் மூலமாக இந்த வழக்கினை ரத்து செய்யகோரி இரண்டு மனுக்கள் தாக்கல் செய்து வைத்து தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அந்த சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் நான் இவ்வழக்கின் புகார்தாரருக்கு காசோலை அளித்த சங்கதியை ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு என்னுடைய காசோலை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்று எந்த காவல் நிலையத்திலும் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். எனது வங்கியாளரிடம் சென்று விசாரணை செய்தேன். நான் வங்கியில் விசாரணை செய்ததற்கு என்ன கூறினார்கள் என்றால் வாசவி என்டர்பிரைசர்ஸ்க்கு செக் அளிக்கப்பட்டது என்று கூறினார்கள். நான் அதுபோன்ற எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்று பதில் அளித்தேன். அதன் பின்பு நான் எந்த விதமான புகாரையும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய ஐந்து காசோலைகள் வெவ்வேறு தேதிகளில் திருப்பப்பட்டுள்ளது. முதல் காசோலை திருப்பப்பட்டவுடன் மற்ற காசோலைக்காக Stop payment கோரிக்கையை வங்கியில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஏனென்றால் முதல், இரண்டு காசோலை திருப்பட்டதே எனக்கு தகவல் தெரியாது. அதனால் மூன்றாம் காசோலை திருப்பட்டபோதுதான் எனக்கு வங்கியிலிருந்து தகவல் வந்தது. அப்படி என்றால் மூன்றாம் காசோலை திருப்பப்பட்டவுடன் மற்ற இரண்டு காசோலைகளுக்கு Stop Payment அளிக்கவில்லையா என்றால் இல்லை. ஏனென்றால் என்னுடைய செக்கை யாரோ கொடுத்துள்ளார்கள் என்ற விவரமே எனக்கு தெரியாது.

நான் கோடி கணக்கில் வியாபாரம் பரிவர்த்தனைகள் செய்கிறேன் என்றால் சரிதான். எனது காசோலைகள் எங்கு இருக்கும், எங்கு வைத்திருப்பேன், யார் அதை கையாளுகிறார்கள் என்றால் நான் என்னுடைய செக்குகளை வீட்டில் தான் வைப்பேன். வியாபாரம் சம்மந்தமாக செல்லும் போது நானும் எடுத்து செல்வேன். எனது அண்ணணும் எடுத்து செல்வார் எனது அண்ணன் பெயர் என்னவென்றால் இர்பான் ஆகும். இந்த சூழ்நிலையில் எனது காசோலைகள் தவறாக பயன்படுத்தபட வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. நான் காசோலை கொடுக்கவில்லை யார் அளித்தார் என்று எனக்கு தெரியாது. சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கை ரத்து செய்ய மனு அளித்தும், இவ்வழக்கிற்கு பதில் அறிவிப்பு கொடுத்ததிலும் நான் புகார்தாரருக்கு காசோலை வழங்கியதாக ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் ஒன்றாம் எதிரியின் நிறுவனமும், எனது நிறுவனமும் சிஸ்டர் கன்சர்ன் தான் என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று தற்போது கூறிகிறேன் என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கு காசோலையை ஒன்றாம் எதிரி நிறுவனம் எனது நிறுவனத்தின் சிஸ்டர் கன்சர்ன் என்பதாலும், இரண்டு முதல் ஐந்து எதிரிகளுக்காகவும், புகார்தாரரிடம் போதுமான பணம் எனது வங்கியில் இருக்கும் என்று உறுதியளித்து இந்த வழக்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் ஒன்று முதல் ஐந்தாம் எதிரிகளின் கடனை திரும்பதர ஒப்புக்கொண்டு காசோலை கொடுத்ததால் இவ்வழக்கில் நானும் எதிரி தான் என்று தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.